<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

<u>அ.வ.எண்.61/2020</u>

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கந்தசாமி | தொழில் | |
| தகப்பனார் பெயர் | மாணிக்கம் | வகுப்பு | |
| வயது | | சமயம் | இந்து |
| நாள் | 24.01.2024 | கிராமம் | |
| சாட்சி | வா.சா.2 | | |

இன்று 24.01.2024 ஆம் தேதியன்று சாட்சி இந்நீதிமன்றம் வரவழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டார்.

<u>முதல் விசாரணை</u> :–

1) நான் தற்போது பள்ளிப்பட்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் அசல் மற்றும் சான்றிட்ட நகல்களுடன் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன்.

2) மேட்டூர் வட்டம், பள்ளிப்பட்டி கிராமம், பழைய சர்வே எண்.242/2, (அதன் புதிய சர்வே எண்.447/21) பட்டா எண்.152 க்குரிய 0.0092.0 சதுர மீட்டர் நிலம் வருவாய் ஆவணங்களின் படி யாருடைய பெயரில் தாக்கல் ஆகியுள்ளது என்றால், தைலாக்கவுண்டர் மகன் நல்லப்பன் என்பவர் பெயரில், தனிபட்டாவாக தாக்கலாகியுள்ளது.

3) மேற்படி சர்வே எண். 447/21ல் உள்ள 0.0092.0 சதுர மீட்டர் நிலத்திற்குரிய நத்தம் நிலவரிதிட்ட அடங்கல் பதிவேடு, நத்தம் தூய சிட்டா, நத்தம் புலவரைபடம், பழைய புல எண்.242/2ன் அ–பதிவேடு, ஆகியவற்றின் சான்று நகல்களை தற்போது நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணங்களின் கோர்வை வாதி தரப்பு 3ம் நபர் சாட்சியின் சான்றாவணம் **சா.சா.ஆ.1(Ex.X.1 series)**ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) மேற்படி சங்கதிகள் தொடர்பாக ஆவணங்களை பரிசீலித்ததின் அடிப்படையில், சாட்சியம் அளிக்கிறேன்.

ஒம்/−திரு. R.மணிவர்மன்,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.